DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the court Judicial Magistrate At Oddanchatram
Case No : DVOP 02/2022
Petitioner Witness : RW1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ராஜேஸ் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | வேலுச்சாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act
Examination Date / சாட்சி விசாரணை தேதி :– 12/03/2026

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

1) நானும் எனது மனைவியும் எவ்வளவு காலமாக பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்றால் கடந்த 2015 ஆம் ஆண்டு எங்களுக்கு திருமண ஆன பின்னர் 4 லிருந்து 5 மாதங்கள் மட்டுமே எனது மனைவி என்னுடன் இருந்தார். அதன் பின்னிட்டு நாங்கள் பிரிந்து தான் வாழ்ந்து வருகிறோம். எனது மனைவி பிரிவிற்கு பின்னர் எங்கே வாழ்ந்து வருகிறார் என்றால் அவரது அம்மா வீட்டில் வாழ்ந்து வருகிறார். எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து மனுதாரர் வந்த முதல் இன்று வரை மனுதாரருக்கும் அவருடைய குழந்தைக்கும் தேவையான அடிப்படையான வசதிகள் அனைத்தையும் மனுதாரரின் தாயாரே செய்து வருகிறார் என்றால் சரிதான். மனுதாரரின் பிரிவிற்கு பின்னர் மனுதாரரையோ அல்லது மனுதாரரின் குழந்தையோ நான் சென்று பார்த்தேனா என்றால் நான் பார்த்தேன். குழந்தைக்கு எத்தனை வயதாகி இருக்கும்போது சென்று பார்த்தேன் என்றால் பிறந்த போது தான் பார்த்தேன். என்னுடைய குழந்தையின் பெயர் என்ன என்றால் வர்ஷன். குழந்தையின் பிறந்த தேதி என்ன என்றால் 02.07.2016 ஆகும். குழந்தை தற்போது எந்த பள்ளியில் படிக்கிறார் என்றால் என் குழந்தையை நான் பார்ப்பதற்கோ, பேசுவதற்கோ மனுதாரர் அனுமதிக்கவில்லை.

2) மனுதாரர் என்னை விட்டு பிரிந்து வந்த நாள் முதல் இன்று வரை அவருடைய தாயார் வீட்டில் தான் வசித்து வருகிறார் மனுதாரருக்கு வேறு ஏதும் இருப்பிடம் இல்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய குறுக்குவிசாரணையில் திருவண்ணாமலையில் எனக்கு சொந்தமாக ஒரு மாடி வீடும் ஒரு பிளாட்–ம் உள்ளது என்று சொல்லியுள்ளீர்களா என்றால் சரிதான். எனது மனைவிக்கும் எனது குழந்தைக்கும் அடிப்படை வசதிகளை செய்து தரக்கூடிய கடமைகள் எனக்கு உள்ளது அதனால் மேற்படி இடத்தில் மனுதாரருக்கும், மனுதாரரின் குழந்தைக்கும் இருப்பிட வசதி வழங்குவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். 2020 ஆம் ஆண்டு மனுதாரர் எனது மகனை பள்ளியில் சேர்ப்பதற்காக என்னிடம் குடும்ப அட்டை கேட்டாரா என்றால் சரியல்ல. நான் குடும்ப அட்டை தரமறுத்ததால் மாண்புமிகு மதுரை

உயர் நீதிமன்ற கிளையில் மனு செய்து குடும்ப அட்டை மனுதாரர் பெற்றுக் கொண்டார் என்றால் சரிதான். எனது மனுதாரருக்கு குழந்தை பிறந்த விவரம் எப்போது எனக்கு தெரியும் என்றால் 02.07.2015 ஆம் ஆண்டு மனுதாரரின் அண்ணன் செந்தில் எனக்கு தொலை பேசி வாயிலாக தெரிவித்தார், அப்போது தான் எனக்கு தெரியும். உங்களது சார்பாக யார் யார் குழந்தையை வந்து பார்த்தார்கள் என்றால் 8 லிருந்து 10 பேர் வந்து பார்த்தோம்.

3) மனுதாரரின் அண்ணன் குழந்தை பிறந்துள்ளது என்று தொலைபேசி வாயிலாக தெரிவித்தபோது 50 பவுன் நகை மற்றும் ஐந்து லட்சம் ரொக்கம் வரதட்சணையாக கொடுத்ததால் தான் குழந்தையை வந்து பார்ப்போம்என்று சொன்னேர்களா என்றால் இல்லை. நான் குழந்தையை மருத்துவமனையில் வந்து பார்த்தபோது எனக்கு 4 சவரன் தங்க நகையும், ரூபாய் ஒரு லட்சம் ரொக்கமும் மனுதாரர் சார்பாக கொடுத்தார்கள் என்றால் இல்லை. நான் தான் திருவண்ணாமலை குடும்ப நல நீதிமன்றத்தில் மனுதாரருக்கு எதிராக H.M.O.P.எண் 325/2021 ஆக விவகாரத்து வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் மனுவின் நகல் நான் தாக்கல் செய்தது தான் என்றால் சரிதான். விவாகரத்து மனுவில் 22.06.2019 ஆம் தேதி தான் மனுதாரர் என்னை விட்டு பிரிந்து சென்றார் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரிதான்.

4) மனுதாரர் என்னுடன் முதல் முறை சண்டையிட்டு பிரிந்து சென்ற பின்னர் மீண்டும் என்னுடன் வந்து வாழவந்தார், அப்போது நானும், 2ம் எதிர்மனுதாரரும் மீதமுள்ள நகையும் பணத்தையும் கொண்டுவந்ததால்தான் இங்கு வாழ முடியும் என்று சொன்னோமா என்றால் இல்லை. 12.09.2024 ஆம் தேதி அன்று எனது குறுக்குவிசாரணையில் எனது விவசாய பூர்வீக இடம் எதுவும் இல்லை என்று சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். உங்களுக்கு விவசாய பூர்வீக இடம் உள்ளது அதை தற்போது கிரையம் செய்வதற்கான முயற்சிகளை நீங்கள் செய்துள்ளீர்கள் என்று மனுதாரர் தெரிந்து அதை எதிர்த்து தடங்கல் மனு அளித்த விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. மனுதாரர் தடங்கல் மனு அளித்த விவரம் எனக்கு தெரிந்தே கடந்த 19.02.2026 ஆம் தேதி மேற்படி பூர்வீக சொத்தை கிரையம் செய்து கொடுத்தேனா என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் அரவக்குறிஞ்சி சார் பதிவகம் கிரையப்பத்திரம் எண் 686/2026 ல் உள்ள கையெழுத்து என்னுடையது தானா என்றால் ஆமாம். மேற்படி கிரையப்பத்திரத்தில் எனக்காகவும் எனது மைனர் மகனுக்காகவும் கார்டியனாக நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

5) 2020 முதல் இன்று வரை நானும், எனது மகனும் பிரிந்து தான் வாழ்ந்து வருகிறோம் இந்நிலையில் இவ்வழக்கில் எந்த ஜீவனாம்சமும் வழங்கக்கூடாது என்பதற்காக சட்டவிரோதமாக என் மகனுக்கு கார்டியனாக கையொப்பம் செய்து கொடுத்து இருக்கிறேன் என்றால் சரிதான். 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் இன்று வரை மனுதாரரும் மனுதாரரின் மகனுக்கும் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தையும் மனுதாரர் குடும்பத்தாரே பார்த்து வருகிறார்கள் அதனால் மனுதாரருக்கும் மனுதாரரின் மகனுக்கும் மனுவில் கூறியுள்ள அடிப்படை வசதிகள்

அனைத்தையும் செய்ய நானே கடமைப்பட்டுள்ளேன் என்றால் மனுவில் கூறியுள்ள படி என்னால் கொடுக்க முடியாது.

(மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க எதிர்மனுதாரரின் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.03.12 17:22:07 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 12/03/2026